Vol.2 No. 1 October 2017 E-ISSN: 2456-5571

# நவீன உளவியல் பரப்பில் காரள் யுங்கினது பகுப்பு உளவியல் சிந்தனையின் எழுச்சி – ஓர் உளவியல் நோக்கு

ஐ. எல்எம். மாஹிர்
*சிரேட்ட விரிவுரையாளர் (மெய்யியல்), சமூக விஞ்ஞானங்கள் துறை,*
*கலை கலாசாரப்பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்**

உளவியல் உளப்பகுப்பாய்வு வரலாற்றில் சிக்மண்ட் பிறைடினைத் தொடர்ந்து கார்ள் யுங்கினது பகுப்பு உளவியல் கருத்தியல் கவனிக்கத்தக்கதாகும். யுங் பிறைடினது கருத்தியல் முன்வைப்பிலிருந்து ஆரம்பித்திருந்தாலும் அதனை நிராகரிப்புக்குள்ளாக்கி புதிய சிந்தனை முறையைத் தோற்றுவித்தவர் என்ற வகையில் அவரது கருத்துக்கள் முக்கியத்துவமுடையது. உளப்பகுப்பாய்வுக்கு மறுதலிப்பாக அமைந்த 'பகுப்பு உளவியல்' கருத்தில் யுங் தனியாள் நனவிலி, கூட்டு நனவிலி என்ற இரண்டு கருத்தாக்கங்கள் பற்றி முன்மொழிகிறார். ஆளுமை உருவாக்கத்தில் கூட்டு நனவிலியின் பிரதிபலிப்பு மற்றும் அதனூடான உளச்சிகிட்சை முறைமை பற்றிய உளவியல் பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைகின்றது. இதற்காக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்**: உளப்பகுப்பாய்வு, நனவிலி, உளச்சிகிட்சை, கூட்டு நனவிலி.

## அறிமுகம்

இயற்கை பற்றிய சிந்தனை மனிதன் சார்ந்ததாகவும் மனம் சார்ந்ததாகவும் திரும்பியபோது உளவியலின் தோற்றம் உருவானது என்பர். நவீன உளவியலின் அறிவியல் கண்ணோட்டம் மனம் பற்றிய கருத்தியல் பரிணாமத்திற்கு வழிகோலியது. அதுவரை தத்துவ நோக்கிலேயே ஆராயப்பட்டு வந்த உளவியல் கருத்தியல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர் கோட்பாடுகளாக உருப்பெறத் தொடங்கியது. இதற்கு அதிகளவிலான உளவியலாளர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். எனினும் உளவியலின் முழுமையான கருத்துருவாக்கம் சிக்மண்ட் பிறைடோடு ஆரம்பித்தது எனலாம்.

சிக்மண்ட் பிறைடினது கருத்திற்கும் இவருக்கு முன்வந்த கோட்பாட்டாளர்களின் கருத்துக்களுக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்பட்டன. பிறைடினுடைய உளப்பகுப்பாய்வுமுறை மனித நடத்தையிலும் ஆளுமையிலும் மறைவான மூல இடங்களை பிரதானமாக ஆய்வு செய்கின்றது. ஆனால் இவருக்கு முன்னரான சிந்தனையாளர்கள் அண்டம்மற்றும் அதன் தோற்றம் பற்றிய பல்வேறு கருத்துக்களை ஆய்வு செய்தும் முன்வைத்தும் வந்தனர். காலப்போக்கில் இதிலிருந்து மாற்றமுற்று இயற்கை, சமுதாயம் போன்றவைபற்றியும் மனிதனை மையமாகக் கொண்ட செயற்பாடுகளான அரசியல், படைப்பாக்கம்,மருத்துவம், உளவியல் போன்றவை பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தனர்.

இதனடிப்படையில் விஞ்ஞான முறைப்படி உள்ளத்தை அணுகும் போக்கிற்கு பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு பின்னரே கவனம் செலுத்தப்பட்டது. ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் உளவியல் வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பு செய்தார்.இதில் பிச்னர், லிப்பிஸ், ஹெல்மால்ட், டார்வின், சார்கோ, பிறைட் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல புரட்சிகளை விஞ்ஞான உலகம் சந்தித்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்க புரட்சிக் கருத்தியலாக சிக்மண்ட் பிறைடின் உளப்பகுப்பாய்வுக் கருத்தியலைக் குறிப்பிட முடியும். உளப்பகுப்பாய்வு எனும் சொல்லை உளவியலிலும் விஞ்ஞானத்திலும் அறிமுகப்படுத்திய இவர் நரம்பியல் நோய்க்குறிகளைக் கண்டறிவதற்கான முறைமையாகவே 'உளப்பகுப்பு மருத்துவம்'என்பதை உருவாக்கினார்.

பிறைடினது இத்தகைய உளவியல் பங்களிப்பு உளப்பகுப்பாய்வு அணுகுமுறையாகப் பரிணமித்தது.

பிறைடிற்கு முன்னர் இதனை ஜோசப் ப்ரூயரே தொடக்கி வைத்திருந்தார். எனினும் பிராய்டின் உளப்பகுப்பாய்வு உளவியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனை எனலாம். பிறைடினால் தொடக்கி வைக்கப்பட்ட உளப்பகுப்பாய்வுச் சிந்தனையின் படிமுறை வளர்ச்சி யுங், அட்லர், லக்கான் என்ற தொடர்ச்சியைப் பெற்றது. 'உளப்பகுப்பாய்வு வட்டத்தில் மாற்றீட்டுச் சிந்தனையைக் கொண்ட யுங் தமது கருத்தியலை 'பகுப்பு உளவியல்' என அமைத்துக் கொண்டார். பிறைடியச் சிந்தனையிலிருந்து நேர் மாறான சிந்தனை என்பதையே இச்சொற்கட்டு சுட்டுகிறது. இதன் மூலம் யுங் தன்னை எதிர் பிறைடியனாக வெளிப்படுத்திக் கொண்டார் (இரவிச்சந்திரன், 2007) எனலாம்.

**உளப்பகுப்பாய்வும் நனவிலியும்**

சிக்மண்ட் பிறைட் (ளுபைஅரனெ குசநரன 1856 – 1939)தனது உளப்பகுப்பாய்வில் நனவிலி என்பதைப் பிரதானமாகக் கையாண்டார். இவருக்கு முந்திய மெய்யியலாளர்களும் உளவியலாளர்களும் நனவிலி என்பதை அறிய முடியாத மனதின் பகுதி என்றே கருதினர். ஆனால் பிறைட் நனவுநிலைச் செயற்பாடுகளிலிருந்து நனவிலியைப் புரிந்து கொள்ளும் முயற்சியைத் தொடர்ந்தார். எனினும் 'நனவிலி' என்பதை துல்லியமாக வெளிப்படுத்துவதில் சிக்கல்கள் இருந்தாலும் பிறைடின் மிக முக்கிய உளவியல் பங்களிப்பாக இதனைக் கொள்ளலாம்.எமது குழந்தைப்பருவத்தில் ஏற்படுகின்ற அனுபவங்கள் வளர்ந்த பின்னரான ஆளுமையினைத் தீர்மானிக்கிறது என்பது பிறைடினது கருத்தாகும். இதனை விளக்க அவர் மனதினை நனவிலி மனம் (ருஉெழளெஉழைரள அinனெ), முன்நனவு மனம் (ளுரடி-உழளெஉழைரள அinனெ), நனவு மனம் (ஊழளெஉழைரள அinனெ) எனப்பிரித்து விளக்கினார் (குசநரனஇ 1973).

பிறைடினைத் தொடர்ந்து நனவிலி பற்றிய கருத்தியலை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்தியவர் கார்ள் யுங் (ஊயசட துரபெஇ 1875 - 1961) ஆவார். இவர் 'மனித மனமானது தனித்தனியாகத் தொடர்புபட்ட கூறுகளால் ஆக்கப்பட்டது என்றார். அதனை ஈகோ (நுபழ), தனியாள் நனவிலி (Pநசளழயெட ருஉெழளெஉழைரள), கூட்டு நனவிலி (ஊழடடநஉவளைந ரஉெழளெஉழைரள) எனப் பாகுபடுத்தி நோக்கினார். ஈகோ நனவிலி மனதினைப் பிரதிபலிக்கின்றது. அது மனிதனது எண்ணங்கள், நினைவுகள், உணர்வுகள் என்பவற்றைக் கொண்டதாகும்'என்பர்.

பிறைடினைப் போலவே யுங் ஆளுமையுடன் தொடர்புபடுத்தி நனவிலியின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தினார். நனவிலிக்கு தனிப்பட்ட தன்மைகள், வரையறைகள், செயற்பாடுகள் என்பன உண்டு என்ற கருத்தில் இருவரையும் நோக்கினும் யுங் அதில் பிறைடிலிருந்து வேறுபடுத்தினார். பிறைட் 'அமுக்கப்பட்ட குழந்தைப்பருவ எண்ணங்களை முதன்மை நனவிலி அடங்கல்களாகச் சுட்டுகிறார்' (இரவிச்சந்திரன்,2007).'இவரிலிருந்து மாறுபட்டு யுங் நனவிலியை இரண்டு அடுக்குகளாகப் பகுத்து நோக்கினர். முதலாவது தனியாள் நனவிலி - இது அடிப்படையில் பிறைடின் நனவிலியுடன் ஒத்தது. தனியாள் நனவிலியில் தற்காலிகமாக மறக்கப்பட்ட தகவல்களும், அடக்கி வைக்கப்பட்ட நினைவுகளும் காணப்படும். இதுதனியாள் நனவிலியின் உளச்சிக்கல்களால் ஆனவையாகும். இது சிக்கலான எண்ணங்கள், உணர்வுகள், நினைவுகள் மற்றும் மனோபாவங்கள் என்பவற்றின் தொகுப்பாகும். இவை ஒரு நபரில் அதிக செல்வாக்குச் செலுத்தக்கூடியவை என்பது இவரது அபிப்பிராயமாகும்'.

**கார்ள் யுங்கினது பகுப்பு உளவியல்**

சிக்மண்ட் பிறைடினது நண்பராகவும் மாணவராகவும் கருதப்படும் கார்ள் யுங் புறைடின் சிந்தனைகளில் கவரப்பட்டு அவருடன் கருத்தியல் நெருக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டார். ஆரம்பத்தில் கடிதத் தொடர்பின் மூலம் இணைந்திருந்த இவர்கள் இருவரும் சந்திப்பினை மேற்கொண்டதன் பின்னர் மேலும் நெருக்கமானார்கள். இதனால் உளப்பகுப்பாய்வுக் கழகத்தினை நிறுவிய பிறைட்

அதன் முதல் தலைவராக யுங்கினை நியமித்தார். இதனைத் தொடர்ந்து பிறைட், யுங் இருவருக்குமிடையில் பல்வேறு விவாதங்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தது. பிறைடினது உளப்பகுப்பாய்வினை மிக நெருக்கமாக அவதானித்த யுங் தனது சுய கருத்துக்களையும் அதில் வளர்த்துக் கொண்டார். இதனால் 1913இல் பிறைடின் கருத்துக்களின் மீதான ஏற்பினைக் கைவிட்டு தனது பகுப்பு உளவியல் கருத்தியலை நிலைநிறுத்தினார்.

பிறைடினது உளப்பகுப்பாய்வினை யுங் மறுப்பதற்கு அதன் பாலியல் கருத்துக்கள் காரணமாகின. அதாவது லிபிடோ பாலியல் ஆற்றலைக் (ளுநஒரயட நுநெசபல) கொண்டது என்ற பிறைடினது பார்வையை யுங் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் லிபிடோ வாழ்வு ஆற்றல் உடையது என்று நம்பினார். உள்ளத்தின் எல்லாவகையான எண்ணங்களின் வழியாகவும் பரவலடைகின்ற இவ்வாற்றல் நல்லது - கெட்டது என்ற வகையில் அமையக்கூடியது. இதனை பாலியல் நோக்கில் மட்டுமே பார்க்க முடியாது என்பது யுங்கின் வாதமாக இருந்தது. லிபிடோவின் வாழ்வியல் ஆற்றலானது ஒரு தனியனை ஆன்மீகம், அறிவாக்கம், படைப்பாக்கம் எனப்பல வழிகளில் ஊக்குவிக்கின்றது. இது மகிழ்ச்சியை நாடவும்,மோதலைக் குறைக்கவும் வழிவகுக்கிறது என்பது யுங்கினது கருத்தாகும்.

மேலும் ஆளுமை பற்றிய கருத்தியலிலும் பிறைடிலிருந்து யுங் மாறுபட்டார். குறிப்பாக ஆளுமையானது இடிபஸ் சிக்கலால் கட்டமைக்கப்படுகின்றது என்ற பிறைடின் கருத்தினை யுங் மறுதலித்தார். ஏனெனில் குழந்தைகளுக்கும் பெற்றோருக்குமான உறவை இவர் மரபு வழிப்பட்டது என்றார். அமுக்கப்பட்ட குழந்தைப்பருவ அனுபவங்கள் நிரம்பியதாக நனவிலி காணப்படுகின்றது என்ற பிறைடின் கருத்தை மறுத்த யுங் தனியாள் அனுபவங்களுடன், மனித இன அனுபவங்களும் நனவிலியில் பொதுந்துள்ளது என்றார். இதனடிப்படையில் நனவிலியை அவர் இரண்டாகப் பிரித்தார். அதாவது நனவிலியின் மேற்பகுதியை 'தனியாள் நனவிலி' எனவும் கீழ்ப்பகுதியை 'கூட்டு நனவிலி' எனவும் பிரித்து நோக்கினார். அமுக்கப்பட்ட அனுபவங்கள் அனைத்தும் தனியாள் நனவிலியில் காணப்படுகின்றன. பிறைடினைப் போலவே இவர் தனியாள் நனவிலியை உளச்சிக்கல்கள் நிறைந்த பகுதி என்றார். கூட்டு நனவிலியை இவர் மனிதனின் புறஉலக உறவுத் தொடர்புகளுக்கு ஆதாரமானவைகள் என்றார். இது தொடரியல் அனுபவங்களின் பரிணாம வெளிப்பாடாகும். 'காலங்காலமாக புழக்கத்தில் இருக்கிற வழக்காறுகள் தோற்றுவித்த படிமங்கள் கூட்டு நனவிலிக்குக் காரணமானவை' (இரவிச்சந்திரன், 2007) என்றார்.

### தனியாள் நனவிலி (Personal Unconscious)

அமுக்கப்பட்ட நினைவுகள் அல்லது அனுபவங்கள் அனைத்தும் தனியாள் நனவிலியில் காணப்படுகின்றன என்ற யுங் ஒரு தனிநபரில் மிகவும் செல்வாக்குச்செலுத்தக்கூடிய ஒன்றாக இது உள்ளது என்றார். இது அடிப்படையில் பிறைடின் நனவிலியுடன் ஒத்ததாக காணப்படுகின்றது. இதுவே உளச்சிக்கல்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதாவது சிக்கலானஎண்ணங்கள், உணர்வுகள், நினைவுகள் மற்றும் மனோபாவங்கள் என்பவற்றின் தொகுப்பாக தனியாள் நனவிலி காணப்படுகின்றது. இதுநனவுப் பகுதியுடன் தொடர்பற்றதாகும். மனித வாழ்வின் சக்தியானலிபிடொ இந்நனவிலியிலேயே இயங்குகின்றது. இதுபிறைட் குறிப்பிடும் பாலியல் உணர்வுகள் லிபிடொ என்னும் கருத்திலிருந்து மாறுபட்டதாகும்.

அதாவது பாலியல் உணர்வும் ஒரு சக்தியாகஇதில் உள்ளது. ஆனால் அனைத்தும் பாலியல் உணர்வு சார்ந்தது அல்ல. லிபிடோ என்பது தனிமனித சக்தியும் மனித வர்க்க சக்தியும் ஒன்றாக இணைந்த ஒருசக்தி. இது மறக்கப்பட்ட விடயங்கள் என்பதால் அது தனியாள் நனவிலி ஆகும். இதில் நமது வெறுப்பு, கோபம் மற்றும் தீராத ஆசைகளும் இதில் அடங்கும்.

பிறைட் கவனம் கொள்ளுமளவிற்கு, யுங் இன் தனியாள் நனவிலியானதுகுழந்தைப்பருவ ஒடுக்கப்பட்ட அனுபவங்கள் தொடர்பில் அதிக கவனம்கொள்ளவில்லையாயினும் இவ்விருவருக்குமான பிரதானமான வேறுபாடாக யுங்கின்கூட்டு நனவிலி பற்றிய விளக்கம் அமைகிறது. இது யுங்கினது ஆளுமைக்கோட்பாட்டில் மிக முக்கியமான பங்களிப்பு எனலாம்.

**கூட்டு நனவிலி (Collective Unconscious)**

இது மனிதத் தொடர்ச்சியின் பரிணாமத்தின் வழியாக நிகழ்கிறது. இதுஉள்ளுணர்ச்சி போல் தன்னியல் ஆதிக்கம் கொண்டது. இதன் வழியாகஉருவானதே கூட்டு நனவிலியாகும். இதனை ஆன்மா தொடர்புடைய ஒன்றாகயுங் பார்க்கின்றார். நனவு நிலையுடன் ஒப்பிடும் போது தனியாள் நனவிலி வலிமைமிக்கதேஎன்றாலும், இது கூட்டு நனவிலியின் ஆளுமைக்கு உட்பட்டதே ஆகும். இதன் வழியாக உருவானதே கூட்டு நனவிலியாகும்.

கூட்டு நனவிலி மனமானது, உயிரிய நினைவுருக்களின் தேக்கியாக உருவகப்படுத்தப்படுகிறது. இது அனைவருக்கும் பொதுவானது என்பதால், இயற்கை வழிப்பட்டதாகிறது. இயற்கை விஞ்ஞானத்திற்கு யுங் சிறப்பிடம் தருவதை அவரின்எழுத்துகளில் காண முடிகிறது. தனியாள் நனவிலி இருப்பதை யுங் ஏற்பினும், கூட்டுநனவிலியே உள ஒழுங்கமைவுகளைத் தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கிறதுஎன்கிறார். கூட்டு நனவிலியில் கிடக்கும் தொல்லுருக்கள் (மூலப்படிவங்கள்) உடன்பிறந்தவைஎன்பதால் அவற்றின் வலிமை, தனியாள் நனவிலியின் வலிமையை விட அதிகமாகஇருக்கும் என்பதில் ஐயமில்லை. எமது நனவிலியின் ஒரு பகுதியில் எமது பரம்பரைத் தன்மைகள் தொடர்ந்து வருகின்றன. அதனடிப்படையில் மனித இனத்தின் அவாவும் உணர்வுகளும், முன்னோர்களது உணர்வுகளும் ஆசைகளும் சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகளையும் ஆதாரமாகக் கொண்டு இவைகட்டமைக்கப்படுகின்றன.

தனியாள் நனவிலி உருவாக்கத்திற்கு அமுக்கம் (Repression) காரணமாக இருப்பதை விபரித்த பிறைடின் கருத்தினை ஏற்கும் யுங், கூட்டு நனவிலிக்குக் காலங்காலமாகப் பழக்கத்தில் இருக்கின்ற வழக்காறுகள் தோற்றுவித்த உருக்கள் அல்லது படிமங்கள்காரணமாகின்றன என்கிறார். இதன்படி, இன நினைவுருக்களின் தொகுப்பே கூட்டுநனவிலி என்பது அவரின் முடிவாகும். பிறைடின் அகநிலை சுயமாகத் தோன்றுவது எனில், யுங்கினது அகநிலை முன்னோர்களால் உருவாக்கப்பட்டதாகும். இரண்டிலும் கடந்தகாலமே அடிப்படை எனினும் யுங் குறிப்பிடும் கடந்த காலம்மனித இனத்தொன்மையைக் குறிப்பதாகும். குறிப்பாகபடிமுறைத் தொடர்புடைய விலங்கின வழியில் உருவானதே கூட்டு நனவிலியாகும் (Jung,1947).

பரம்பரையாக முன்னோரிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் கூட்டு நனவிலியில் இடம்பெறுகின்றது. இக்கருத்துக்கள் அனுபவ அடிப்படையில் எம் நனவிலியில் மூல உருக்களாகின்றன. நமது கடந்த காலங்களில் மற்றும் வளர்ந்தோர் பருவத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் உணர்வுகள் ஆழ்மனக் கருத்துக்கள்,மற்றும் அதன்தொடர்புடைய நிகழ்வுகளும், உணர்வுகளும் அதன் மேல் அடுக்கப்படுகிறது. இவைநடைமுறையில் ஒரு செயல்களும் அதன் விளைவுகளும் தண்டனை வழங்கலால் மீண்டும் செய்யப்படாமல் தவிர்க்கப்படுவதை அவதானிக்கலாம். அதேபோல் பரிசு வழங்குகின்ற போது மீண்டும் ஊக்கத்தோடு செய்யப்படுவதை அவதானிக்க முடியும். பரிசு வழங்கல் மற்றும் தண்டனை வழங்கல் என்பது ஒரு செயலை நேர் மற்றும் எதிர்மறையாக மாற்றுகிறது. இந்தமனப்பான்மைகள் சில நனவிலும் சில ஆழ்மனதில்அறியாமல் புதைந்தும் காணப்படலாம். சில மிதமானதாகவும் சில அடங்கியும் காணப்படுகிறது. அதேபோல் சில தீவிரமானதாகவும் சில ஆளுமையானதாகவும் காணப்படும்.இதன்

ஆதாரம் உணர்வுகளின் தீவிர்த்தினால் நிர்மாணிக்கப்படும்.

கூட்டு நனவிலியே உள ஒழுங்கமைப்புக்களைத் தீர்மானிக்கின்ற சக்தியாக இருக்கின்றது என்கிறார் யுங். தனியாள் நனவிலி வலிமையுடையது எனினும் அது கூட்டு நனவிலியின் ஆளுகைக்கு உட்பட்டதே. கூட்டு நனவிலியில் இருக்கும் மூலப்படிவங்கள் உடன் பிறந்தவை என்பதால் அவற்றின் வலிமை தனியாள் நனவிலி வலிமையை விட அதிகமாக இருக்கும். மூலப்படிவங்களை ஒன்றித்த அனுபவங்கள் அமையும் போது வலிமையானதாகி நனவை ஆதிக்கம் செய்கின்றன. மனிதர்கள் புறஉலகில் உறவு வைத்துக் கொள்வதற்கு ஆதாரமாக இம்மூலப்படிவங்கள் அமைகின்றன (Jung,1947).

மூலப்படிவத்திலிருந்தே தனிநபர் ஒவ்வொருவரினதும், பண்புகளும், எண்ணங்களும் மாதிரியாக்கப்படுகின்றன அல்லது பிரதியெடுக்கப்படுகின்றன எனலாம். 'மூலப்படிவங்களை ஆளுகைகள், தொல்லுருக்கள், வார்ப்புருக்கள், தொன்மப்படிவங்கள், நடத்தை முறைமைகள் போன்ற சொற்களில் கையாளுகிறார் யுங்' (இரவிச்சந்திரன், 2007). உலகின் பல்வேறு கலாசாரங்கள் பெரும்பாலும் ஒத்த தன்மைக்கூறுகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஏனெனில் கூட்டு நனவிலியின் மூலமாக முழு மனித இனமும் மூலப்படிவப் பரிமாற்றத்தை நிகழ்த்துகின்றது. மனித ஆன்மாவில் கடந்த காலப் பரிணாம அமைப்பானது அடிப்படைப் பண்பாக அமைந்துள்ளது. இவை மரபணு வழியாகக் கடத்தப்பட்டு வருகிறது.அவைதான் எமது நிகழ்கால நடத்தையைத் தீர்மானிக்கிறது.

பகுப்பு உளவியலில் மூலப்படிவங்கள்

கூட்டு நனவிலியில் மூலப்படிவங்கள் பரிமாற்றம்அடைவதனாலேயே உலகின் பல்வேறு கலாசாரங்கள் பெரும்பாலும் ஒத்ததன்மைக் கூறுகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. சமூகப் பண்பாட்டு நடவடிக்கைகளை ஆதாரமாகக் கொண்ட கருத்துகள் நனவிலிக்குள் மூலப்படிவங்களாகப் பொதிந்து காணப்படுகின்றன. இவையே மனித ஆளுமையைக் கட்டமைக்கின்றன. இவை உள ஆற்றல்களாக இருந்து உளச்செயற்பாடுகளை நிர்வகிக்கின்றன. இவை பிறைடிய உளவியலில் காணப்படும் உளச்சிக்கல்களுக்கு இணையாகக் காணப்படுகின்றது. இவ்வாறான மூலப்படிவத்திலிருந்தே பிற நபர்கள் ஒவ்வொருவரும், பண்புகளும், எண்ணங்களும் மாதிரியாக்கப்படுகின்றன அல்லது பிரதியெடுக்கப்படுகின்றன எனலாம். மனித மனதில் பரிணாம வளர்ச்சியின் விளைவாக அதன் மீது பதிக்கப்பட்ட உள்ளார்ந்த பண்புகள் உள்ளன. இந்த உலகளாவிய முன்கணிப்புகள், மூதாதையர்களின் கடந்தகாலக் கூறுகளாக உருவாகின்றன. இருளைப் பற்றிய பயம் அல்லது பாம்புகள் மற்றும் சிலந்திகள் மீதான பயம் என்பவற்றை இதற்கு உதாரணங்களாகக் குறிப்படலாம். இவைமனித ஆளுமையின் தனி அமைப்புகளாக உருவாகியுள்ளன. இத்தகைய மூதாதையர் நினைவுகள் மற்றும்படங்கள் அதாவது மக்கள் தம் வாழ்க்கையில் பெறும் அனுபவங்கள் கருத்தியல்களாகமாறி மூல உருச்சின்னங்களாக (Archetype) அமைகின்றன என யுங் குறிப்பிட்டார்.

மூலப்படிவங்களுக்கு ஒன்றித்த அனுபவங்கள் ஏற்படுகின்ற போது, அவை வலிமைபெற்று நனவை தமது ஆதிக்கத்திற்குள்ளாக்கி விடுகின்றன. மனிதன் புறவுலகில் உறவுமுறைகளை வைத்துக் கொள்வதற்கு ஆதாரமாக, இந்த மூலப்படிவங்கள் விளங்குகின்றன. ஒட்டுமொத்த மனித இனமும் இம்மூலப்படிவங்களாலேயேநெறிப்படுத்தப்படுகின்றன. ஏனெனில் இவை தொடரியல் அனுபவங்கள் வாயிலாகப் பெறப்பட்ட நினைவுருக்கள் ஆகும். இந்த நினைவுருக்களே கருத்துகளாகப் படிந்து மரபணு வழியில் கடத்தப்பட்டுப் பரவி வருகின்றன. இவற்றைக் கூட்டு நனவிலியின் ஆக்கக் கூறுகளாக காண்கிறார் யுங், யுங்கிய இயக்காற்றல்உள்ளத்திற்கு மூலப்படிவங்களே ஆற்றல்களாகும். இவை ஒவ்வொன்றும் உளஆற்றலின் கொடிகளாக விளங்குகின்றது. (இரவிச்சந்திரன், 2007).

யுங் கூறும் மன அமைப்பில் கூட்டு நனவிலியின் பங்கு பிரதானமானது. காலங்காலமாகஉயிரியல் பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் என்பவற்றின் நினைவுருக்களாக மூலப்படிவங்கள் விளங்குவதால், அவை தாமாகத் தொழிற்படுகின்றன. மனிதஆன்மாவில் கடந்த காலப் பரிணாம அமைப்பானது அடிப்படைப் பண்பாகஅமைந்துள்ளது. இவை மரபணு வழியாகக் கடத்தப்பட்டு வருகிறது. இவைநிகழ்கால நடத்தையைத் தீர்மானிப்பதாகவும் தமக்கு மேலுள்ள உளஒழுங்கமைவுகளைத் தீர்மானிக்கும் இயக்காற்றல் வாய்ந்தவையாகவும் விளங்குவதால்,மனிதனது உள்ளுணர்ச்சிகளுக்கு ஒப்பானதாகவே இவை காணப்படுகின்றன.

இதில் சில மூலப்படிவங்களைப் பின்வருமாறு விளக்கலாம். அதாவது முகமூடி என்ற மூலப்படிவம் புற உலகுக்கு வெளிக்காட்டுகின்ற ஒரு பண்பாகக் காணப்படுகின்றது. தனது உண்மையான சுயத்தை மறைத்து வெளிப்புறமாக நடிப்பதை இது குறிக்கிறது. அதாவது உண்மையில் தான் யார் என்பதை மறைத்து வேறொன்றாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதாகும். மற்றுமொரு மூலப்படிவமான Anima / Animus என்பது எமது உயிரியல் பாலினத்தின் (biological sex) பிரதிபலிப்பாகும். அதாவது ஆணில் பொதிந்துள்ள பெண்மைத் தன்மையையும் (கநஅைைநெ) பெண்ணில் பொதிந்துள்ள ஆண்மைத் தன்மையையும் (masculine) குறிக்கிறது. இந்த ஒவ்வொரு பாலினமும் பல நூற்றாண்டுகளாக இணைந்து வாழ்ந்திருப்பதனால் தான்சார்ந்த பால்நிலைக் கூறுகளிலிருந்து மாறுபட்ட பிற மனப்பான்மையையும் நடத்தையையும் அவை வெளிப்படுத்துகின்றன.

**உளச்சிகிட்சை முறைமை**

உளச்சிக்கலைக் கண்டறிய யுங் சொல் இயைபுச் சோதனை (Word Association Test) என்னும் முறையைக் கண்டுபிடித்தார். அதாவது ஒருவருடன் பேசி அவர் பதிலளிப்பதனை அவதானிப்பதே யுங்கினுடைய உளச்சிக்கலைக் கண்டறியும் முறைமையாகும். சேவைநாடிகளிடம் (Client) சில சொற்களைக்கூறி அவர்கள், உடனடியாக அச்சொற்களுக்கு கூறும் பிறிதொரு சொல்லைதுலங்கலாகக் கொண்டு, அவர்களின் உளச் சிக்கலைக் கண்டறிய முடியும் என யுங் கூறினார். துலங்கல் சொல்லினைக்கூற தாமதம் ஏற்பட்டாலோ துலங்கல் சொல் புதுமையானதாக இருந்தாலோ அதுஉளச்சிக்கலின் அறிகுறியாகும் என யுங் கருதினார். மனவெழுச்சிகளும் உடல்சார்துலங்கல்களும் கூட உளச்சிக்கல் இருப்பதற்கு அறிகுறியாகும் என யுங் கருதினார்.

பல துலங்கல்கள் ஒரே மையக் கூறான உளச்சிக்கலுடன் இயைபுடையதாகக் காணப்படலாம். தனி நனவிலியின் மையக்கூறு தன்முனைப்பில்கட்டுப்பாட்டிற்குள் இயங்காமல் தனித்து இயங்குவதால், அதனை மறப்பது கடினம்.மக்கள் தம்மை அறியாமலேயே தம் உளச் சிக்கல்களை வெளிப்படுத்தும் வகையில் பழகவோ, செயல் புரியவோ, உரையாடவோ முற்படுகின்றனர். உளச்சிக்கல்கள்எப்பொழுதும் சுதந்திரமாக இயங்குவதற்குத் தடையாக இருப்பதில்லை. சிலபோது ஆக்க வழியில் தனி மனிதனை இயங்கச் செய்யும் இவை அமைகின்றன. மக்கள் தம் வாழ்க்கையில் பெறும் அனுபவங்கள் கருத்தியல்களாக மாறி மூல உருச்சின்னங்களாக (Archetypes) அமைகின்றன.

குழந்தைப் பருவத்தில் அன்பு கொள்ளும் பெற்றோர் குடும்பத்தில் அனைவரதும் நலன்களிலும் ஈடுபாடு கொண்டுள்ள உறவினர்கள் போன்றோர் குழந்தைகளுக்கு மூல உருச்சின்னங்களாக (Role model) அமைவர். இக்கருத்தியலுடன் இயைபில்லாத அனுபவங்களை நாம் அடையும் பொழுது இவ்வுருவங்கள் மாறுதல்கள் அடைகின்றன. மூல உருச்சின்னங்களில் மாறுதல்கள் ஏற்படாவிடில் ஆளுமையில் கருத்தியல்களின் ஆதிக்கம் ஏற்படுகிறது. அதாவது யுங்கினது கருத்தின் பிரகாரம் குழந்தைப் பருவ மூல உருச்சின்னங்கள் வளரும் பருவத்தில் மாறுதல்களுக்கு உள்ளாக வேண்டும். கற்றல் மற்றும் அனுபவங்களினூடாக அனுபவங்கள் மாற்றமடைதல் வேண்டும். கூட்டுநனவிலி (Collective

Unconscious) என்பது மனிதர்கள் பரம்பரை பரம்பரையாகத் தங்களது முன்னோரிடமிருந்து பெற்றிருக்கும் கருத்துக்களைக் குறிக்கும். இக்கருத்துக்கள ் அனுபவ அடிப்படையில் மூல உருச்சின்னங்களாகின்றன.

**முடிவுரை**

பிறைடின் கருத்தியல் அமைப்பிலிருந்து மாறுபட்டு தனது கருத்தினை பகுப்பு உளவியல் என்பதாக யுங் நிறுவினார். நனவிலி பற்றிய பிறைடின் கருத்தினை தனியாள் நனவிலி என்ற கருத்தினுள் உள்ளடக்கி, அதற்கு அப்பால் கூட்டு நனவிலி உள்ளது எனவும் அதுவே உள வாழ்வுக்கு அடிப்படை எனவும் யுங் விபரித்தார். இதன் தொடர்ச்சியாக மூலப்படிவம், கூட்டு நனவிலி, பரிணாம இயல்புத் தொடர்ச்சி போன்றவை பற்றிய புதிய கருத்துக்களை உருவாக்கினார். எனினும் இவரது கருத்தியல்கள் குறிப்பாக தொன்மவியல், சோதிடம், மாயாஜாலம் என்பவற்றின் பிரதிபலிப்பாக அமைந்திருந்தன என்ற விமர்சனம் முன்வைக்கப் பட்டிருப்பினும் கூட்டு நனவிலி பற்றிய இவரது கருத்தியல் உற்று நோக்கத்தக்கதே. இது குறிப்பிடும் வரலாற்றுத் தொடர்ச்சி மனித இயல்பில் அவதானிக்கத்தக்கதாக இருப்பதை மறுக்க முடியாத சூழ்நிலை நிலவுகின்றது எனலாம்.

**உசாத்துணைகள்**

1. Freud, S., (1915), The unconscious, SE, 14: 159-204.
2. Freud, S., (1966), Project for a Scientific Psychology, in Sigmund Freud, The Standard Edition of the Complete Psychological Works of Sigmund Freud [ed. and trans. James Strachey, Anna Freud, Alix Strachey, and Alan Tyson], vol. I, London: The Hogarth Press, pp. 281–397.
3. Freud,S., (1973), “New Introductory lectures on Psychoanalysis, vol-2”, Penguin,
4. Freud.S., (1986), “Historical and expository works on Psychoanalysis, vol-15”, Penguin, London.
5. Jung, C. G., (1947), On the Nature of the Psyche, London: Ark Paperbacks.
6. Jung, C. G., (1948), The phenomenology of the spirit in fairy tales, The Archetypes and the Collective Unconscious, 9(Part 1), 207-254.
7. Jung, C. G., (1953).], Collected works, Vol. 12. Psychology and alchemy.
8. Jung, C. G., (1921), “Psychological types. The collected works of CG Jung”, Vol. 6 Bollingen Series XX.
9. இரவிச்சந்திரன், தி.கு., (2007),.ஃப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், சென்னை : அடையாளம்.
10. கிருஷ்ணராஜா, சோ.,(1999), பின்நவீனம் ஓர் அறிமுகம்,ஒலுவில்: மெய்யியல் சங்கம், இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்.
11. கஜவிந்தன், க., (2013), உளவியல்,கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.